கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 28.07.2023

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் Agri Udaan 6.0 – வேளாண் வணிகங்களை மேம்படுத்தவதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தொழில் நுட்ப வணிக காப்பகமானது a-IDEA, இந்திய வேளாண் ஆராய்ச்சியகம் (ICAR- NAARM) ஹைதராபாத் உடன் இணைந்து Agri Udaan என்னும் ஒரு வேளாண் வணிகம் சாந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை 28.07.2023 அன்று வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நடத்தியது.

வேளாண் வணிக மேம்பாட்டு இயக்கக முன்னாள் இயக்குனர், முனைவர் S.D.சிவக்குமார் அவர்கள் வேளாண் சார்ந்த புதிய சிந்தனைகள் நாட்டின் வளர்ச்சியை பெருக்கவும், வறுமையை ஒழிக்கவும் வழிவகுக்கிறது என்று வலியுறுத்தினார். விவசாயத்தின் எதிர்காலமாக இருக்கும் தொழில் நுட்பம் மற்றும் விஞ்ஞானத்தின் முக்கியத்துத்தை அவர் வலியுறுத்தினார். மேலும் தொழில்முனைவோர் பருவநிலை மாற்றம், சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு மற்றும் விவசாயத்தை பாதிக்கும் சூழல்ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் மாணவர்கள் புதிய சிந்தனை மற்றும் வேளாண் கண்டுபிடிப்புகளுக்கான போட்டிகளில் பங்கேற்பதன் Ideathon challenge மூலம் வேளாண் வணிகங்களை செம்மைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இந்திய வேளாண் ஆராய்ச்சியகம், கரும்பு இனப்பெருக்க நிறுவன இயக்குனர் முனைவர்.G.ஹேமபிரபா அவர்கள் தங்கள் தலைமை உரையில் தொழில் முனைவோர்கள் நிதியுதவி, தொழில்நுட்பம் சார்ந்த வழிகாட்டுதல்கள், அரசு மற்றும் வணிக காப்பகங்கள் மூலம் பல்வேறு வாய்ப்புகளையும் சேவைகளையும் பெற முடியும் என்று கூறினார்.

மேலும் இந்த வாய்ப்புகள் தொழில்முனைவோர்களை வேளாண் வணிகத்தில் ஈடுபடவும், நாட்டின் உற்பத்தியை அதிகரிக்கவும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும் வழிவகுக்கின்றது என்றுரைத்தார். இந்திய வேளாண் ஆராய்ச்சியக (ICAR- NAARM) இணை இயக்குனர் முனைவர்.G.வெங்கடேஷ்வர்லு அவர்கள் தங்கள் உரையில் Agri Udaan 6.0 என்னும் திட்டத்தைகல்வி, தொழில் நுட்பம், வேளாண்மை ஆகிய மூன்றிற்கும் சிறப்பு பெற்ற கோவையில் நடத்துவதற்கான தேவையை வலியுறுத்தினார். ICAR-NAARM வேளாண் ஆராய்ச்சியாளர்கள், பேராசிரியர்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், தொழில்முனைவோர்கள் ஆகியோர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன என்பதை தெரிவித்தார். மேலும் தற்போது துளிர் நிறுவனங்களுக்கு துறை சார்ந்த திறன் மேம்பாட்டு பயிற்சி, தொழில்நுட்ப வழிகாட்டுதல் மற்றும் நிதி உதவி பெறுவதற்கான இணைப்புகளும் ICAR-NAARM ல் வழங்கப்படுகின்றன என்று விரிவாக எடுத்துரைத்தார்

முனைவர்.S.செந்தில் விநாயகம், முதன்மை விஞ்ஞானி மற்றும் முதன்மை செயல் அலுவலர் a-IDEA, இந்திய வேளாண் ஆராய்ச்சியகம் (ICAR- NAARM) Agri Udaan 6.0 பற்றி விரிவாக விளக்கினார். திரு.C.திருமலா ராவ் மாவட்ட மேம்பாட்டு மேலாளர், NABARD -ன் செயல்பாடுகளை விரிவாக பகிர்ந்தார். திரு.J.எட்வர்டு ராஜ குமார், உதவி பொது மேலாளர், பாரத ஸ்டேட் வங்கியின் திட்டங்களை விளக்கினார். தொழில் நுட்ப வணிக காப்பக நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி திரு.A.V.ஞானசம்பந்தம் அவர்கள் வரவேற்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் 100க்கும் மேற்பட்ட தொழில் முனைவோர்கள், முதலீட்டாளர்கள், வணிக விஞ்ஞானிகள், தொழில் அதிபர்கள் வங்கி அலுவலர்கள் மற்றும் தொழில் நுட்ப வணிக காப்பகங்களின் மேலளார்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டு இந்நிகழ்வை சிறப்பித்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**